# EPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**In the Court of Judicial Magistrate No.II, Virudhunagar**

| | | |
|---|---|---|
| **Calendar Miscellaneous Special case** | **:** | **CC.No. 599/2022** |
| **Deposition of witness for** | **:** | **PW 7** |
| **Name** | **:** | ராஜசுலோசனா (காவல் ஆய்வாளர்) |
| **Father's/Husband's name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of**

07.08.2026

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். )**
**முதல் விசாரணை**

1. நான் தற்போது வேலூர் மாவட்டம் நக்சல் தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2021ம் ஆண்டு விருதுநகர் கிழக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது 10.11.2021ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகேசன் என்பவர் குற்ற எண்.181/2021, பிரிவுகள் 294(b), 506(i) இதச மற்றும் 4 of TNPWH Act –ன் கீழ் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை பார்வையிட்டு மேற்படி வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 15.45 மணிக்கு சம்பவஇடம் சென்று சாட்சிகள் பன்னீர், பாலமுருகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் சரளாதேவி, போஸ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே 17.30 மணிக்கு எதிரியை அல்லம்பட்டி ஜங்சனில் வைத்து காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3. பின்னர் 19.11.2021ம் தேதி சாட்சிகள் பாண்டி, ராமர் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகேசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து இவ்வழக்கின் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294(b), 506(i) இதச மற்றும் 4 of TNPWH Act –ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ சமயத்தின் போது எதிரியின் வீடும் அ.சா.1ன் வீடும் எதிர்எதிர் வீடுகள் என்றால் சரிதான். மேற்படி அ.சா.1ன் குடும்பத்திற்கும், எதிரியின் குடும்பத்திற்கும் வாறுகால் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். வழக்கு பிரச்சனை தொடர்பாக அ.சா.1 சம்பவம் நடந்த மறுநாள் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அ.சா.1 சொன்னது போன்று வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் சம்பவம் நடந்த உடனே அ.சா.1 புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் மனுவிலும் என்னிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் எதிரி என்ன வார்த்தையால் திட்டினார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். எதிரி அ.சா.1 ஐ ஆபாசமாக எதுவும் பேசாததால் தான் குறிப்பிட்டு வார்த்தை எதையும் புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் எதிரி அரிவாளைக் காட்டி மிரட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எதிரி மீது புகார் கொடுத்த அன்றைய தினமே எதிரியின் அம்மா ராஜாத்தி அ.சா.1ன் மீதும் அ.சா.1ன் கணவர் மீதும் புகார் கொடுத்தார் என்றால்

சரியல்ல. அ.சா.1 எதிரி மீது புகார் கொடுத்த அன்றைய தினமே எதிரியின் அம்மா ராஜாத்தி அ.சா.1 ன் மீதும் அ.சா.1 ன் கணவர் மீதும் புகார் கொடுத்தார் என்றாலும் நான் தான் அந்த புகார் மனு மீது வழக்கு பதிவு செய்ய மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை பின்னிட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று எதிரி எந்தவித குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

P IYAPPAN

Digitally signed by P IYAPPAN